**செய்தி வெளியீடு எண்: 258** **நாள் : 02.06.2016**

## <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க **02.06.2016** அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த டெல்டா மாவட்டங்களுக்கான குறுவை தொகுப்பு திட்ட செயலாக்கம் குறித்து, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு இரா.துரைக்கண்ணு அவர்களின் தலைமையில் வேளாண்மைத்துறை மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறையின் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. குறுவை நெல் சாகுபடியினை ஊக்குவிக்கும் பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் **1.6.2016** அன்று **54** கோடியே **65** இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் குறுவை நெல் சாகுபடி தொகுப்பு திட்டம் டெல்டா மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் என அறிவித்தார்கள். மேற்காணும் அறிவிப்பை செயல்படுத்தும் முகத்தான் டெல்டா மாவட்டங்களுக்கான குறுவை தொகுப்பு திட்ட செயலாக்கம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கடலூர், அரியலூர், திருச்சி மாவட்ட வேளாண்மை துறை மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்துள்ள குறுவை சாகுபடி திட்டத்தின்படி உரிய காலத்தில் இடுபொருட்கள் விநியோகம் செய்வது, விவசாயிகள் உழவு பணிகளை மேற்கொள்ள வசதியாக வேளாண் பொறியியல் துறையில் உள்ள இயந்திரங்களை பயன்படுத்துவது குறித்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வேளாண்மைத் துறை அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் முனைவர் ச.விஜயகுமார், இ.ஆ.ப., வேளாண்மைத்துறை ஆணையர் முனைவர் மு. ராஜேந்திரன், இ.ஆ.ப., வேளாண்மைப் பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் திரு. வி.தெய்வேந்திரன் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**